

# மரணத்தைக் கண்டு

கடும் மழையில் நனைந்து,
தெருவில் அங்கும் இங்கும்
ஓடும் சின்னஞ் சிறுசாக
உனை நான் கண்டேன்.

என் கால்களை மட்டும்,
குறி வைத்து பின்னால்
ஓடி வரக் கண்டேன்.
“அடி.... சூ” என்றேன்.
விரைந்து நடந்தேன்.
நீயோ விடுவதாயில்லை.

வேகமாக வந்தது காரொன்று.
அதிலிருந்து உனைக் காக்க
உனை கையில் எடுத்தேன்.
பாதை ஓரத்தில் குனிந்து
உனைக் கீழே வைத்தபோது,
நீ நிமிர்ந்து
என் முகம் கண்டாய்.
உன் கதை சொன்னாய்.

மரணத்தை கண்டேன் என்றாய்.
மரணத்தை மட்டும் அல்ல
அதன் முன்னையும் பின்னையும்
கூட கண்டேன் என்றாய்.
‘ஏன் நான்?
ஏன் எனக்கு மட்டும் இப்படி?
வாழ்வின் சோகம் எனை
மட்டும் துரத்துவது ஏன்?‘ என்றாய்.

கீழே வைத்த உனை
மீண்டும் கையில் எடுத்தேன்.
தடவிக் கொடுத்தேன்.
விரைந்து ஓடும் இவ்வுலகில்
வாழும் வகை
சொல்லிக் கொடுத்தேன்.

இன்று நீ
வளர்ந்து நிற்கிறாய்.
நிமிர்ந்து நிற்கிறாய்.
தெருவில்
அங்கும் இங்கும் ஓடும்
சின்னஞ்சிறுசுகளுக்கு
பாதையும் காட்டுகிறாய்.

அதை பார்க்கையில்
நெஞ்சை நிறைக்கிறதே
ஏதோவொன்று,
அதன் பெயர் தான்
தாய்மையோ?

- 2001